\\

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY IN PATTA LAND OF M/S. D. GOVINDASAMY ROUGH STONE AND GRAVAL QUARRY, S.F.NO. 699/2, 699/3 OVER AN EXTENT OF 2.90.50 HECTARES IN MAGARAL - B VILLAGE, WALAJABAD TALUK, KANCHEEPURAM DISTRICT ON 10.10.2023**

| | |
|---|---|
| Name of Project: | Proposed rough stone and gravel quarry of M/s. D. Govindasamy Rough Stone and Graval Quarry, S.F.No.699/2, 699/3 over an extent of 2.90.50 Hectares, Magaral – B Village, Walajabad Taluk, Kancheepuram District. |
| Venue: | M/s. Azhagan Mahal, Uthiramerur Road, Magaral Village, Walajabad Taluk, Kancheepuram District. |
| Date and Time: | 10.10.2023 at 10:30 A.M |
| Participants: | 1. Thiru Mr.M.Narayanan, Competent Authority/ District Revenue Officer (L.A), National Highway, Kancheepuram.<br>2. Er.K.Prakash, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur, Kancheepuram District. |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur welcomed the District Revenue Officer, Kancheepuram District, other Government Officials, Public and Social & Environmental activists for the Public Hearing and informed that M/s. D. Govindasamy Rough Stone and Gravel Quarry has proposed Rough stone and gravel quarry at S.F.No. 699/2, 699/3, over an extent of 2.90.50 Hectares, Magaral – B Village, Walajabad Taluk, Kancheepuram District and

has approached State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance. In this regard, SEIAA-TN has issued Terms of Reference (TOR), subject to one of the condition that Public Hearing shall be conducted and address the concerns raised during the public hearing to SEIAA-TN. Based on that, the public hearing was arranged today 10.10.2023 after getting approval from the District Collector, Kancheepuram District and public notice has been published as mandated in the newspaper namely "The New Indian Express" (English) & "Dhinakaran (Tamil)" on 25.08.2023.

On behalf of project proponents, the Project Consultant will make power point presentation about the said proposed projects. After that the public present here can express their views, concerns and questions if any by indicating their name and village name from where he /she belongs to and the same will be recorded.

Project consultant Thiru. G. Umamageshwaran explained about the proposed Rough Stone and Gravel Quarry project through a power point presentation. The views, concerns and questions of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name and Village | Comments and requests |
|---|---|---|
| 1 | Thiru.Sri Ragavendran, Magaral | Good morning to all. I welcome the District Revenue Officer, District Environmental Engineer, Police Department providing safety and the people who have gathered here. I am speaking on behalf of 150 to 200 youngsters of Magaral who have gathered here. The village is far from the site and we are not affected. One problem for Magaral village is alternate road that was provided. So we welcome the Quarry. Second is the environmental safety. For almost 15years they are operating without any problem. No |

| | | |
|---|---|---|
| | | problem from all the quarries operating. In ancient times people select their king by voting in maple leaf and by raising hands in support. I request the people who support to raise hands or stand. This is an ancient method. People who supported have raised their hands. |
| 2 | Thiru Mohan, Magaral | I own 4 acres of land. Adjacent to this they are starting the Quarry. Agriculture is important for us. My father is a farmer and I am a son of underprivileged society residing in Kancheepuram. Agriculture is essential but due to pollution can't able to manage the show in the farming activity. Students could not go to school. Saying that water is sprinkled is all fake. We are suffering. People who own 50 acres of land have not been called to express their views. |
| 3 | Thiru.Sekaran, Magaral | All the people gathered here want quarry. They are benefitted by the quarry. No big impact. Will you look for 10 people benefit or 100 people benefit? People are benefitted by the quarries. |
| 4 | Tmt.R.Lakshmi, Magaral | Lot of benefits by the quarry. The quarry owners spray water for 10 minutes a day. Village not affected. Lot of people work here. M Sand used for building house. Lot of vehicles driven and drivers get work. |
| 5 | Thiru.Nagaraj, Magaral | Lights are provided for almost 3 crores of quarry money. Roads are provided from the quarry money. Provided hospital with quarry money. So we support this quarry. |

| | | |
|---|---|---|
| 6 | Thiru.Manikandan, Magaral | Earlier one person spoke that he is from magaral and residing in Kancheepuram and that no water is sprayed. I am born in Magaral and I know that every day they spray water. What he said is false. Agriculture is important but we don't have land and we get work from the quarry. Magaral Quarries provide job for 200 people. We survive because of these quarries. When we the local people of magaral need M Sand and jelly for building shops and houses, they charge less. Around 35 lakhs fund with mining resource which they assured to renovate the middle school of our village. I am from this village. Will u accept my views or the views of a person from Kancheepuram. |
| 7 | Thiru.Ayyapan, Magaral | I am doing agriculture for the past 20 years and this quarry is proposed near my land. I oppose this quarry. |
| 8 | Thiru.Senthil, Magaral | I run a small hotel. Because of these quarries I am getting some business. I support this quarry. |
| 9 | Thiru.Balakrishnan, Magaral Village Agriculture society member. | This quarry is about 2 kms away from the village. Due to quarrying of stone, the eri bund should not get damaged. Use separate path for quarrying activity. |
| 10 | Thiru.Selvaraj, Magaral | I am working as a building supervisor. We need M Sand for work, otherwise I should remain at home. We need quarry. |
| 11 | Thiru.Settu, Magaral | We have no problem because of quarry. They provided rice bags during corona. We village people will buy those 4 – 5 acres of land |

| | | |
|---|---|---|
| | | owned by the people who oppose. We need quarry. |
| 12 | Thiru.Rajasekaran, Magaral (President, Village Agriculture and Residential Welfare Society) | Since 2019 lot of people offered their views. Lot of problems arises due to quarry. Peoples from quarry side only spoken. People who own land has not spoken. Those who own land only face problems. Only who suffer from pain go to doctor for treatment. No one knows the number of industries operating here. There are 25 industries operating. A report has been submitted by the Joint director, Department of Animal Husbandry stating that the lungs of cattle gets affected due to dust from quarries. In 2022, an Engineer, PWD, WRO, Palar Basin circle stating that in Magaral Village agriculture, eri and water bodies are affected and requested the District collector not to grant approval to any quarries. We have also submitted petition many times since 2019 but Mining and Environmental Department has not taken any action. We couldn't carry out agriculture. We only need to do demonstration by burning copy of family card. Children couldn't walk. Come and see my house, my bedroom and kitchen affected by dust. This village doesn't need any quarry or any separate road. We have passed resolution against these 25 industries. |
| 13 | Thiru.Ajith Kannan, Magaral | Out of 500 people only 4 to 5 people who own land oppose. Around 200 drivers work here |

| | | |
|---|---|---|
| | | in quarries. Only people who posses land are opposing. We have nothing; our only source of income is from working in quarries. |
| 14 | Tmt. Saritha Ravi, Magaral | Our family gets affected by quarry so we don't need quarry. |
| 15 | Tmt.Jayachitra, 7th ward, Magaral | From quarry we earn. Hence we want quarry. |
| 16 | Thiru. Adhi Kesavan, Magaral | Quarry should not come. For them to earn why we need to suffer. Don't need quarry. |
| 17 | Thiru.Gunasekaran, Magaral | We couldn't do any work due to the operation of quarries. Due to blasting we fear that our houses will get damaged. So we don't need quarry. |

Since no more public came forward to offer their views, District Environmental Engineer concluded the public hearing meeting thanking the District Revenue Officer, Kancheepuram District who presided the meeting and Officials, Public and NGO's and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai.

The list of participants, audio and video recording, representation received on stage (23 Nos) during the meeting in original with photographs of the Public hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**TNPCB, Sriperumbudur,**
**Kancheepuram District**

**Competent Authority/District**
**Revenue Officer (L.A), i/c**
**National Highway, Kancheepuram,**
**Kancheepuram District.**

**காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், மாகரல்–B கிராமம், புல எண். 699/2, & 699/3ல் 2.90.50 ஹெக்டர் பரப்பளவில், அமையவுள்ள தி/ள்.D.கோவிந்தசாமி என்பவரது சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 10.10.2023 அன்று காலை 10.30 மணியளவில் தி/ள்.அழகன் மஹால், மாகரல்–B கிராமம், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், மாகரல்–B கிராமம், புல எண். 699/2, & 699/3–ல் 2.90.50 ஹெக்டர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். D. கோவிந்தசாமி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி |
| இடம் | தி/ள்.அழகன் மஹால், மாகரல்–B கிராமம், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| நாள் மற்றும் நேரம் | 10.10.2023 காலை 10.30 மணி |
| பங்குபெற்றோர் | 1. திரு. மா. நாராயணன், பி.எஸ்.சி<br>தகுதி வாய்ந்த அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர்,(நி.எ)<br>தேசிய நெடுஞ்சாலை,<br>காஞ்சிபுரம் மாவட்டம்.<br><br>2. திரு. கு. பிரகாஷ், எம்.டெக்.,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வருகைதந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், மாகரல்–B கிராமம், புல எண். 699/2, & 699/3–ல் 2.90.50 ஹெக்டர் பரப்பளவில் தி/ள். D. கோவிந்தசாமி என்பவரது சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் விண்ணப்பித்து TOR (Terms of Reference) என்கின்ற வரையறைகளை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவின் 01.06.2023 தேதியிட்ட குறிப்பு விதிமுறை கடிதத்தின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த

கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 25.08.2023 அன்று "தினகரன்" என்கிற தமிழ் நாளிதழிலும் மற்றும் "தி நியூ இந்நியன் எக்ஸ்பிரஸ்" என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 10.10.2023 இல் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தினை இத்திட்ட ஆலோசகர் திரு. G. உமா மகேஸ்வரன், பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | திரு.ஸ்ரீ ராகவேந்திரன்,<br>மாகரல் | அனைவருக்கும் இனிய காலை வணக்கம், இங்கு வந்ததுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளருக்கும், இங்கு பாதுகாப்பு அளிக்கும் காவல் துறையினருக்கும், ஊர் பொதுமக்களுக்கு வணக்கத்தை தெரிவித்துக்கொள்றேன். இங்கு வந்துள்ள மாகரல் இளைஞர்கள் நூற்று ஐம்பது, இருநூறு இளைஞர்கள் சார்பாக நான் பேசுகிறேன். என்னுடைய கருத்து என்னவென்றால் மாகரல் கிராமத்தில் உள்ள வீடுகள் தூரமாக இருக்கு அதனால் எங்களுக்கு பாதிப்பு இல்லை. மாகரல் கிராமம் பற்றி கேள்விபட்டிருப்பீர்கள் பல பிரச்சனைகள் அது என்னவென்றால் ஒன்று மாற்று வழி, அந்த மாற்று வழி எங்களுக்கு போட்டாகிவிட்டது, அதனால் நான் குவாரிக்கு சம்மதம் தெரிவிக்கிறேன். மற்றொன்று என்னவென்றால் |

5

| | | |
|---|---|---|
| | | சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு எவ்வித பிரச்சனை இல்லாமல் கிட்டத்தட்ட பதினைந்து வருடமாக செய்து கொண்டு வருகின்றனர், பல குவாரிகள் இருந்தாலும் இவங்க எந்த பாதிப்பு இல்லாமல் நடத்தி வருகிறார்கள், பண்டைய காலத்தில் மன்னரை தேர்ந்தெடுப்பதற்கு பனை ஓலை முறைப்படியும், கை தூக்கியும் ஆதரவை தெரிவிப்பார்கள். கை தூக்கி மக்கள் இந்த குவாரிக்கு யார் ஆதரவு தெரிவிக்கிறாங்களோ அவர்கள் கை தூக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இது பண்டைய கால முறைதான், இளைஞர்கள் மகளிர் சார்பாகவும் எழுந்து நின்று உங்கள் ஆதரவை தெரிவிக்கலாம். |
| 2 | திரு.மோகன், மாகரல் | எங்கள் நிலம் நான்கு ஏக்கர் அதன் பக்கத்திலேயே ஐந்து மீட்டர் அருகில் கல் குவாரி ஆரம்பிக்க உள்ளவர்கள் எங்களுக்கு விவசாயம் முக்கியத்துவம், எனது அப்பா விவசாயி, நான் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் மகன், இப்பொழுது காஞ்சிபுரத்தில் இருக்கிறேன், விவசாயம் தான் முக்கியம், ஆனால் மாகரல் எவ்வளவு மாசு தெரியுமா, ஒரு கடை கூட நிம்மதியாக வைத்திருக்க முடியவில்லை, பள்ளி மாணவர்கள் போக முடியவில்லை, தண்ணீர் விடுவதாக சொல்வது எல்லாம் சும்மா, பாதிக்கப்படுவது நாங்கதான் ஏனென்றால் இங்கு ஐம்பது ஏக்கர் நிலம் உள்ளது அவர்களை கூப்பிட்டு கேட்கமாட்டேன் என்கிறார்கள். |
| 3 | திரு.சேரன், மாகரல் | இங்க எல்லோரும் குவாரி வேண்டும் என வந்திருக்காங்க ஏன் தெரியுமா, எல்லோரும் குவாரியால் பயன் அடைந்திருக்காங்க, பாதிப்பு எதுவும் |

| | | |
|---|---|---|
| | | பெரியதாக இல்லை. பத்து பேர் பயன்அடைவதை பார்ப்பிற்களா? இல்லை நூறு பேர் பயன் அடைவதை பார்ப்பிற்களா? மொதுமக்கள் யாருக்கும் பாதிப்பு இல்லை. |
| 4 | திரு. ஆர். லட்சுமி, மாகரல் | குவாரியால் நிறைய நன்மைகள் உண்டு, தண்ணிர் விடுறாங்க, ஒரு நாளைக்கு பத்து நிமிடத்திற்கு தண்ணிர் விடுறாங்க, இதை நடத்துகிறவர்களினால். மகளிருக்கோ, ஊருக்கு எந்த பாதிப்பும் இல்லை. இதனால் பத்து பேர் வேலைக்கு போறாங்க, நிறைய பேர் வேலை செய்றாங்க, எம் சான்ட் வீடு கட்டுவதற்கு உபயோகமாகிறது. அங்கு நிறைய பேர் வண்டி ஓட்டுகிறார்கள். அங்கு ஓட்டுநருக்கு வேலை கிடைக்கிறது. |
| 5 | திரு. நாகராஜ், மாகரல் | இப்பொழுது இரவில் லைட் எரிகிறது. எந்த பணம் என்றால் எல்லாம் குவாரி பணம் தான். ரோடு போடுகிறார்கள் எல்லாம் குவாரி பணம் தான். ஆஸ்பிட்டல் கட்டிருக்காக எல்லாம் குவாரி பணம் தான். அதனால் குவாரியை நாங்கள் வரவேற்கிறோம். |
| 6 | திரு.மணிகண்டன், மாகரல் | முன்பு பேசிய ஒருவர் சொன்னார், பூர்விகம் மாகரல். இப்பொழது காஞ்சிபுரத்தில் இருக்றேன் தண்ணிர் விடுவது இல்லை என்று. நான் பிறந்தது மாகரல் நான் தினமும் பார்க்கிறேன், எனக்கு தெரியும் தண்ணீர் விடுகிறார்கள். தண்ணீர் விடுவதில்லை என்று அவர்களுக்கு எப்படி தெரியும், ஆக மொத்தத்தில் அவர் சென்னது தவறான விஷயம். விவசாயம் முக்கியம் தான் ஆனால் ஆரம்பத்திலிருந்து எங்களுக்கு நிலம் இல்லை நாங்கள் கல் குவாரியில் வேலை செய்தே ஆக வேண்டும் எங்களுக்கு வேறு வழியில்லை. இருநூறு பேர் வேலைகளை பூர்த்தி செய்கிறது |

| | | |
|---|---|---|
| | | மாகரல் கிராமம். இது இல்லை என்றால் எங்களுக்கு வாழ்வாதாரம் இல்லை. கடை கட்டுவதற்கு எம் சாண்ட் வேண்டும் வீடு கட்ட எம் சாண்ட் வேண்டும், ஜல்லி வேண்டும் நாங்கள் எங்கே சென்று கேட்பது, மாகரல் குவாரியில் சென்று கேட்கும்போது உள்ளூர் ஆள் என்பதால் வெளி விலையை விட பத்து ரூபாய் விலை குறைவாக கிடைகிறது. இப்பொழுது முற்பத்து ஐந்து இலட்சம் கனிம வளத்தில் இருக்கிறது. நடுநிலை பள்ளியை சீர் செய்வதாக சொன்னார்கள். எங்கள் ஊருக்கு உதவி செய்ய குவாரி முன் வருகிறது. நான் இந்த கிராமத்தை சேர்ந்தவன் நான் சொல்வதை கேட்பீர்களா, இல்லை காஞ்சிபுரத்திலிருந்து வரும் ஒருவர் சொல்வதை கேட்பீர்களா? |
| 7 | திரு.ஐயப்பன், மாகரல் | நாங்கள் இருபது ஆண்டு காலம் விவசாயம் செய்கிறோம். எங்கள் நிலம் பக்கத்தில் கல் குவாரி அமைக்கிறார்கள். அதை அமைக்க கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்றோம். |
| 8 | திரு.செந்தில், மாகரல் | நான் சின்ன ஓட்டல் நடத்துகிறேன், இந்த குவாரியால், ஓரளவு வியபாரம் நடந்து கொண்டு இருக்கிறது, அதனால் இந்த குவாரியை நாங்கள் வரவேற்கிறோம். |
| 9 | திரு.பி.பாலகிருஷ்ணன், மாகரல் (கிராம விவசாய சங்கத்தின் உறுப்பினர்) | இந்த குவாரியில் எடுக்கக்கூடிய தண்ணீரோ, கல்லோ, மணலோ ஏரிகரை மடுவை பாதிக்கக் கூடாது. இந்த குவாரியானது நமது ஊரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது குவாரிக்கு தனி வழி அமைத்து செல்லுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். |
| 10 | திரு. செல்வராஜ், மாகரல் | நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். எங்களுக்கு எம் சாண்ட் இருந்தால்தான் வேலைக்கு செல்ல முடியும். எம் சாண்ட் |

| | | |
|---|---|---|
| | | இல்லை என்றால் நாங்கள் வீட்டில் இருக்கனும். எங்களுக்கு இந்த குவாரி வேண்டும். |
| 11 | திரு.சேட்டு, மாகரல் | மாகரில் குவாரியால் எந்த பாதிப்பும் இருக்காது. கொரோனா நேரத்தில் அனைவருக்கும் அரிசி மூட்டை கொடுத்தார்கள் குவாரிக்கு பக்கத்தில் பாதிக்கப்படும் நான்கு, ஐந்து ஏக்கர் நிலம் கிராமத்தில் உள்ளவர்கள் வாங்கி கொள்கிறோம். எங்களுக்கு குவாரி வேண்டும் மிகவும் நன்றி. |
| 12 | திரு.ராஜசேகரன், மாகரல் (கிராம விவசாய மற்றும் குடியிருப்பேர் நல சங்கம் தலைவர்) | கிட்டத்தட்ட 2019இல் இருந்து நிறைய பேர் கருத்து தெரிவித்தார்கள். குவாரியால் நிறைய பாதிப்புகள் இருக்கிறது. இங்கே கருத்து தெரிவித்தவர்கள் அவர்களுடைய கருத்தை தெரிவித்து இருக்கின்றார்கள் முதலில் ஒரு விசயம் என்ன வென்றால் குவாரி பக்கத்தில் உள்ளவர்கள்தான் பேசியிருக்கிறார்கள். இந்த பக்கம் உள்ளவர்கள் பேச வில்லை. இங்கு நிலம் உள்ளவர்களுக்கு தான் அந்த பாதிப்பு, உடம்பு வலி இருப்பவர்கள் தான் டாக்டர் இடம் சென்று பார்க்க முடியும், உடம்பு வலி இல்லாதவர்கள் யாரும் டாக்டர் இடம் செல்வது இல்லை. இந்த ஊரில் எவ்வளவு தொழிற்சாலை இருக்கிறது என்று அவர்களுக்கு தெரியாது, புள்ளி விவரம் தெரியாது. எத்தனை தொழிற்சாலை இருக்கிறது என்று யாருக்காவது தெரியுமா ஐயா, சொல்லுங்கள், கிட்டத்தட்ட இருபத்து ஐந்து தொழிற்சாலைகள் உள்ளதாக. கனிம வளத்துறையிலும், சுற்றுச்சூழல் துறையிலும் அறிக்கை பெறப்பட்டு உள்ளது. இதனால் கால்நடைகளுக்கு, நுரையீரல் பாதிப்பு வருகிறது என்று கால்நடை துறையினர் ஆய்வு செய்து படிவம் கொடுத்திருக்கிறார்கள். |

| | | |
|---|---|---|
| | | இன்னொறு விஷயம் என்ன வென்றால் 2022-ல் மாகரல் கிராமத்தில் ஏரிகள் பாதிக்கிறது, நீர் நிலைகள் பாதிக்கிறது, அதனால் இந்த இடத்தில் குவாரிகள் அமைப்பதற்கு அனுமதி கொடுக்க கூடாது என்று கீழ் பாலாறு வடிநிலப்பகுதி பொறியாளர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அறிக்கை கொடுத்திருகிறார்கள். மூச்சிதினரல் வருகின்றது என்று கால்நடை துறை அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் இதுவரை பல முறை மனுவாக கொடுத்திருக்கிறோம். 2019-ஆம் ஆண்டிலிருந்து மனு போட்டிருக்கிறோம் இது வரைக்கும் கனிம வளதுறையோ, சுற்றுச்சூழல் துறையோ எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. விவாசயம் செய்ய முடியவில்லை. குடும்ப அட்டை நகல் எரிப்பு போரட்டம் தான் நடத்த வேண்டும். குழந்தைகள் நிம்மதியாக போக முடியவில்லை, எங்கள் வீட்டுக்கு வந்து பாருங்கள் எங்கள் படுக்கை அறை சமையல் அறை, காய்கறி வைக்கும் இடம் வரைக்கும் தூசு படிகிறது. இனி எங்களுக்கு எந்த தொழிற்சாலையும் தேவை இல்லை, மாற்று வழியும் தேவையில்லை. கிராம சபையில் தொழிற்சாலை வரக்கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோம். |
| 13 | **அஜீத் கண்ணன், மாகரல்** | இங்கு இருக்கும் 500 பேரில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டவர்கள் 4, 5 பேரை தவிர வேறு யாராவது 1 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறீர்களா. இங்கு 200 டிரைவர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். இடம் வைத்திருக்கிறவர்கள் பேசுவார்கள் நம்மிடம் எதுவும் இல்லை. குவாரியில் வேலை செய்வதால் மட்டுமே வருமானம் |

| | | |
|---|---|---|
| | | வருகிறது. |
| 14 | சரிதா ரவி, மாகரல் | குவாரியால் எங்கள் குடும்பம் பாதிக்கப்படுகிறது. அதனால் எங்களுக்கு இந்த குவாரி வேண்டாம். |
| 15 | ஜெயசித்ரா, 7வது வார்டு, மாகரல் | கல் குவாரியால் எங்களுக்கு நிறைய கிடைக்கிறது. அதனால் எங்களுக்கு கல் குவாரி வேண்டும். |
| 16 | ஆதிகேசவன், மாகரல் | குவாரி வர கூடாது, இவர்கள் சம்பாதிக்க நாங்கள் கஷ்டபடி வேண்டுமா, விவசாயம் செய்ய முடியவில்லை, கை எடுத்து கும்பிடுகிறேன் கல்குவாரி வேண்டாம். |
| 17 | குணசேகரன், சுரண்டல் கிராமம் | கல் குவாரியால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை, குவாரியில் வெடி வைப்பதால் வீடுகள் இடிந்து விழும் என்ற அச்சம் வருகிறது. அதனால் எங்களுக்கு குவாரி வேண்டாம் |

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராத பட்சத்தில் இப்பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், ஏனைய அரசுதுறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகத்திற்கு அனுப்பப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கூட்ட முடிவில் நேர்முகமாக பெற்ற மனுக்கள் (23) அனைத்தும் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

தகுதி வாய்ந்த அலுவலர்/ மாவட்ட வருவாய்
அலுவலர்,(நி.எ), தேசிய நெடுஞ்சாலை,
காஞ்சிபுரம் மாவட்டம்.